# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை

## Ang Mo Kio Tamil Methodist Church

***28th ஜூன் / June 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

| | |
|---|---|
| † **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. கோவிந்தராஜு**<br>Mr.Govindaraju |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. கோவிந்தராஜு**<br>Mr.Govindaraju |
| **தொடக்க பாடல்**<br>† Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### எப்போதும் நீர் தேவை

*1. எப்போதும் நீர் தேவை*
*அரும் கர்த்தா!*
*உமதின்ப வார்த்தை என்னில் நீங்கா*

**நீர் தேவை ஆ நீர் தேவை**
**எப்போதும் நீர் தேவை**
**ஆசீர்வதியும் மீட்பா,**
**சேர்வேன் உம்மை.**

*2. எப்போதும் நீர் தேவை*
*தங்கும் கிட்ட*
*அற்றுப்போம் சோதனை நீரே*
*சேர.*

*3. எப்போதும் நீர் தேவை*
*வாழ்வில் தாழ்வில்!*
*எல்லாம் வீணாம், உம்மைக்*
*காணா விடில்.*

*4. எப்போதும் நீர் தேவை!*
*பரிசுத்தா,*
*ஏற்றுக்கொள்ளும் என்னை,*
*பரதேவா.*

| | |
|---|---|
| † ***மாறி வாசித்தல் 26ம் ஞாயிறு***<br>***"சங்கீதம் 84"*** | **சபையார் இணைந்து**<br>Congregation |

**"உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்!"**

Psalter Reading – "Psalm 84"

| | |
|---|---|
| † **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **சாட்சியின் நேரம்**<br>Time of Testimony | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **சிறப்புப் பாடல்**<br>Special Song | **பாடகர் குழு**<br>Choir |
| † **காணிக்கைப் பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### அற்புத தேவனின் செய்கைகள் யாவும்

**அற்புத தேவனின் செய்கைகள் யாவும்**
**அற்புதமே என்றும் அற்புதமே**
**தேவனின் அற்புதம் உந்தனில் மலர**
**தேவனின் பாதம் சரணடைவாய்**

*1. எகிப்தின் பாரம் விலகிடுதே*
*இருளும் நீங்கி ஒளி பெறுதே*
*அகத்தினில் மறைந்திடும் பாவங்கள் நீக்கி*
*இயேசுவின் ஒளியும் தோன்றிடுதே - அற்புத*

*2. சிவந்த கடலும் வழி விடுமே*
*தடையாம் எரிகோ அகன்றிடுமே*
*கர்த்தரின் வார்த்தையின் வல்லமையாலே*
*அற்புதம் உந்தனில் வெளிப்படுமே - அற்புத*

*3. வறண்ட தாகம் தீர்த்திடவே*
*ஓங்கிய புயத்தை நீட்டினாரே*
*கண்மலை திறந்து தாகமே தீர்த்தார்*
*உந்தனின் தாகத்தை தீர்த்திடுவார் - அற்புத*

*4. குருடர் செவிடர் முடவருக்கும்*
*சுகமே இயேசு அளித்தனரே*
*இயேசுவின் நாமம் ஒளஷதமாகும்*
*அற்புத சுகமே அடைந்திடுவாய் - அற்புத*

*5. சீறும் கடலை அமர்த்தினாரே*
*சீடரின் பயத்தை அகற்றினாரே*

*உந்தனின் பயங்கள் யாவையும் நீக்கி*
*அற்புதர் ஜெயமாய் நடத்திடுவார் – அற்புத*

† ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

† ***<u>திருமறைப் பாடம்</u>*** — ***திருமதி ஷீலா பிரின்ஸ்***
<u>Scripture Reading</u> — Mrs. Sheela Prince
***எஸ்தர் 6:1-13***
Esther 6:1-13

***அருளுரை*** — ***மறைதிரு. சி. ஏ. பெஞ்சமின்***
Sermon — Rev. C. A. Benjamin

† ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***<u>கர்த்தரின் கை குறுகவில்லை</u>***

*1. கர்த்தரின் கை குறுகவில்லை*
*கர்த்தரின் வாக்கு மாறிடாதே*
*சுத்தர்களாய் வாழ்ந்திடவே*
*சுதனருள் புரிந்தனரே*

***விசுவாசியே நீ பதறாதே***
***விசுவாசியே நீ கலங்காதே!!***
***விசுவாசத்தால் நீதிமான்***
***இன்றும் என்றும்***
***பிழைப்பான்***

*2. பரிசுத்த ஆவியானவரே*
*பரிசுத்த பாதையில்*
*நடந்திடுவார்*
*கிருபையிலே*
*வளர்ந்திடுவோம்*
*வரங்களை நாடிடுவோம்*

*3. நெஞ்சமே நீ அஞ்சிடாதே*
*தஞ்சம் யேசுஉன் அரணே*
*தம் ஜனத்தை சீக்கிரமாய்*
*தம்முடன் சேர்த்துக்*
*கொள்வார்*

*4. மேகம் போன்ற வாக்குத்*
*தத்தம்*
*சூழ நின்றே காத்திருக்க*
*விசுவாசத்தால் உரிமை*
*கொள்வாய்*
*விரைந்து முன்னே றிடுவாய்*

***அறிவிப்புகள்***
Announcements

† ***<u>மனப்பாட வசனம்</u>*** — ***சபையார் இணைந்து***
<u>Memory Verse</u> — Congregation
***எஸ்தர் 4 : 14***
Esther 4 : 14

***24. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான்.***

† ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

† ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

† ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing